# நிபந்தனைகளின்றி அரசுடன் பேச புலிகள் தயார்

[பாரிஸ்]

நிபந்தனையின்றி ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தை தொடங்க விடுதலைப் புலிகள் ஆவலாக இருப்பதாக விடுதலைப் புலிகள் இயக்கப் பேச்சாளர் திரு. லோறன்ஸ் திலகர் பாரிசில் தெரிவித்தார்.

இலங்கை அரசு பேச்சுக்களைத் தொடங்கு முன்னர் தனது நிபந்தனைகளைக் கைவிட வேண்டும் என்றும் அவர்

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 4-50

# ஈழநாடு

# THE EELANADU
## NATIONAL TAMIL DAILY

மலர்: 33 பங்குனி 27 ரமழான் 24 இதழ்: 59
யாழ்ப்பாணம் புதன்கிழமை 10-04-1991

## காரைநகர் ஷெல் தாக்குதல்:
# 3 பெண்கள் பலி

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடற்படைமுகாமிலிருந்து நேற்று நண்பகல் மேற்கொள்ளப்பட்ட அகோர ஷெல் தாக்குதலில் 3 பெண்கள் பலியானார்கள். ஐவர் படுகாயமடைந்தனர்.

நண்பகல் 11-30 மணியிலிருந்து களபூமி பகுதியை

(4-ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் தமிழர் கொலை வீடுகள் எரிப்பு

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் கடந்தவாரம் இராணுவத்தினர் தமிழர்கள் பலரைச் சுட்டுக்கொலைசெய்ததுடன் தமி

(4-ம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் புலிகள் அதிரடித் தாக்குதல்:
# பொலிஸ் இன்ஸ்பெக்டர் உட்பட ஒன்பது பேர் ஸ்தலத்தில் பலி

## ஜீப் தீயிட்டு எரிக்கப்பட்டது

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில், பேசாலையில் இருந்து ஒரு மைல் தூரத்தில் இருக்கும் துள்ளுக்குடியிருப்பு என்னுமிடத்தில் நேற்று முன்தினமிரவு பொலிஸ் படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டர் உட்பட ஒன்பது பொலிஸார் பலியானார்கள். பெருமளவு ஆயுதங்கள் மீட்கப்பட்டன. ஜீப் வண்டி தீயிட்டு எரிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் தலைமன்னாரிலிருந்து பொலிஸ் படையினர் மன்னார் நகரிலுள்ள ஆஸ்பத்திரிக்குச்சென்று திரும்பியபொழுது பேசாலையிலிருந்து ஒருமைல் தொலைவில் இருக்கும் துள்ளுக்குடியிருப்பு என்னுமிடத்தில் பொலிஸ் படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர்

இத்தாக்குதலினால் ஒன்பது பொலிஸ் படையினர் கொல்லப்பட்டனர். பல ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன

இரு ரி. எஸ். முதலாம் ரகத் துப்பாக்கிகள், இவற்றிற்குரிய

(4-ம் பக்கம் பார்க்க)

## தள்ளாடி இராணுவம் பின்வாங்கி திரும்பியது

(மன்னார்)

தள்ளாடி இராணுவ முகாமில் இருந்து கனரக இராணுவ வாகனங்கள் சகிதம் வெளியே வந்த சிறிலங்கா இராணுவத்தினரை, விடுதலைப் புலிகள் இடைமறித்துத் தாக்கியதில் இராணுவத்தினர் பலத்த சேதங்களுடன் மீண்டும் முகாமுக்குள் சென்றுவிட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தள்ளாடி இராணுவத்தினர் 2 லொறி, 2 பவல் வாகனம், 2 கவச வண்டிகள் சகிதம் மாந்தை சந்திக்குச் செல்கையில், விடுதலைப் புலிகள் 600

[4-ம் பக்கம் பார்க்க]

## விடைத்தாள்கள் அனுப்பப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் நடைபெற்ற விசேட புலமைப் பரீட்சை விடைத் தாள்கள், திங்கட்கிழமை இரவு கொழும்புக்கு யாழ். கல்வித் திணைக்களத்தில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (152)

## தொகுதி ரீதியாக அபிவிருத்தி வேலைகளுக்கு
# 25 லட்சம் ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் அபிவிருத்தி வேலைகளுக்குப் பன்முகப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தில் தொகுதி ரீதியில் 25 லட்சம் ரூபா செலவு செய்வதென, நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

யாழ் அரச அதிபர் தலைமையில், நேற்று யாழ் செயலகத் திணைக்களத் தலைவர்களிடையே நடைபெற்ற கூட்டத்தில், மேற்படி தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

[4-ம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் புலிகளை சமாளிக்க படையினர் குவிப்பு

[கொழும்பு]

கிழக்கு மாகாணத்திற்கு மேலதிகமாக பெருமளவுபடையினர் அனுப்பப்பட்டு வருவதாக கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

கிழக்கில் புலிகளின் தாக்குதலை சமாளிக்கமுடியாது இராணுவம் திண்டாடுவதையடுத்தே பெருமளவு இராணுவம் உதவிக்காக அங்கு அனுப்பப்படுகிறது.

இதற்கிடையில் நேற்றும் திருமலை, மட்டக்களப்பு, அம்

[4-ம் பக்கம் பார்க்க]

## கேரதீவில் குண்டு வீச்சு

(யாழ்ப்பாணம்]

கேரதீவு இறங்குதுறையில் மூன்றாவது முறையாக விமானத்தாக்குதல் நேற்று முன்தினம் இரவு 2-00 மணிக்கு மேற்கொள்ளப்பட்டது.

இப்பகுதியில் இருபொம்மர் விமானங்கள் குண்டுகளை வீசியதில் பாதை முற்றாக

(4-ம் பக்கம் பார்க்க)

## 4 தமிழ் இளைஞர்கள் கொழும்பில் கைது

(கொழும்பு)

கொச்சிக்கடை பகுதியில் வீடொன்றிலிருந்த 4 தமிழ் இளைஞர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 25பாஸ்போர்ட்டுகளும் வேறும் தஸ்தாவேஜுகளும் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் யாழ்ப்பாணம், அளவெட்டி, வவுனியா, திருமலையை சேர்ந்த இளைஞர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [சி

## அநுராதபுர பாதுகாப்பினால் கொழும்பு செல்லத் தடை

(யாழ்ப்பாணம்)

கொழும்புசெல்லமுடியாமல் பெருந் தொகையான யாழ். பயணிகள் புளியங்குளம், ஓமந்தைப் பகுதிகளில் பெரும் கஷ்டங்களை அனுபவித்துவருகிறார்கள்.

கடந்த பல நாட்களாக

(4-ம் பக்கம் பார்க்க,

## யாழ்ப்பாணம் கொழும்பு
# பயணிகள் கப்பல் சேவை ஆரம்பம்?

(நமது நிருபர் தேவா)

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமிடையில் பயணிகளை ஏற்றிச் செல்வதற்கான கடற்கப்பல் போக்குவரத்துச் சேவை ஒன்று ஆரம்பிக்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த கடற்போக்குவரத்துக்கான முயற்சிகளில் யாழ். நகரிலுள்ள சில தொண்டர் ஸ்தாபனங்கள் ஈடுபட்டு வருவதாகத் தெரிய வருகிறது.

யாழ்: கொழும்பு தரைப் போக்குவரத்தில் தற்போது ஏற்பட்டுள்ள சிரமங்களையடுத்தே இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

(4ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### வாங்கப்படும்

கால், அரை, முக்கால் போத்தல் அளவு திரவம் கொள்ளக்கூடிய சுத்தமான போத்தல்கள். மில்க்வைற்.
(சி 1219)

### உருவச்சிலைகள்

வெண்கல உருவச்சிலைகள் செய்து கொடுக்கப்படும். விபரங்களுக்கு: சிற்பி P. சிங்கம், 13, கோவில் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (சி 4627)

### தவறிவிட்டது

திருநாவுக்கரசு மோகனதாஸ் ஆகியஎனது 683470368V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை சாவகச்சேரி தபால் நிலைய வீதியில் தவறவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். திருநாவுக்கசு மோகனதாஸ், கோதிவுறோட், தச்சந்தோப்பு, கைதடி,
(சி 1221)

### கல்வி

கணிதம் O/L 90, 91 பரீட்சைகளில் விசேட சித்தி, அதிவிசேட சித்தியடைவதற்காகக் கடந்த 15 வருடங்களாக O/L விடைத் தாள்கள் திருத்திய அனுபவமுள்ள ஆசிரியரால் ஆண்டு 5 தொடக்கம் ஆண்டு 10 வரையிலான மாணவர்கட்கும் விசேட முறைகளில் கற்பிக்கப்படும். 480A, கே. கே எஸ். வீதி, யாழ்நகர் அல்லது 85, சிவன்கோவிலடி, திருநெல்வேலி.
(சி–4630)

### தேவை

சமூகசேவை நிறுவனத்தில் தங்கி பணி செய்யும் ஆவல் உள்ள ஓய்வு பெற்ற ஆசிரியர் தேவை. உணவு இருப்பிட வசதியுடன் ஊக்குவிப்பு உதவிப்பணமும் வழங்கப்படும். 20-04-91க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 4625 C/o. ஈழநாடு, யாழ்ப்பாணம்.
(சி 4525)

## மீண்டும் ஊரடங்கு

[கொழும்பு]

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் மீண்டும் நேற்றுத் தொடக்கம் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.


## அந்தியேட்டி அழைப்பு

### சரவணமுத்து செல்வராசா

(சட்டத்தரணி)

27-3-91ம் திகதி சிவபதமடைந்த எமது தந்தையார் சட்டத்தரணி சரவணமுத்து செல்வராசாவின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 11-4-91ம் திகதி காலை நடைபெறுவதால் அத்தருணமும் அதன்பின் நடக்கவிருக்கும் மதியபோசனத்திலும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் குடும்பசமேதரராக பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

செல்வராசா நித்தியானந்தன் (மகன்)
இராஜஇராஜேஸ்வரன் தங்கராஜா (பெருமகன்)

இல. 4, செட்டித்தெரு, ஒழுங்கை,
நல்லூர்.
(சி 4628)



## 31-ம் நாள் நினைவுநாள்



### திருமதி செல்வக்குமாரி

தோற்றம்: 25-03-1953
மறைவு: 11-03-1991

எங்கள் குடும்ப விளக்காய் திகழ்ந்த அமரர் செல்வக்குமாரியின் அந்தியேட்டிக் கிரியை 10-04-1991 [இன்று] புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திக்காக உற்றார், உறவினர், நண்பர்கள் பிரார்த்திக்கிறார்கள்

இங்ஙனம்:
திருமதி சி. சின்னத்துரையும்
பிள்ளைகளும், மருமக்களும்
பேரப்பிள்ளைகளும்.

ஐயனார் கோவிலடி,
மல்லாகம்.
[சி 4629]


### பனந்தொழில் வல்லுநர் பயிற்சித் திட்டம்

# 200 கோடி ரூபா செலவில் 10 ஆயிரம் பேருக்கு பயிற்சி

[பருத்தித்துறை]

தமிழீழ ஆய்வு நிறுவனம், இலங்கை பனம்பொருள் அபிவிருத்திச்சபை, யாழ் மாவட்ட தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஆகியன இணைந்து பனந்தொழில் வல்லுநர் பயிற்சித் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளன. இத்திட்டத்தின்கீழ் 10,000 பேருக்கு பயிற்சிகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### நவீன முறைகள்

பனந்தொழில் வல்லுநர் பயிற்சித் திட்டத்தின் கீழ் தொழில் பாரம்பரிய முறைகளை மாற்றியமைக்கவும், நவீனமுறைகளைப் புகுத்தவும், பனந்தொழில் வல்லுநர்களுக்கு அங்கவடுக்கள் ஏற்படுவதைத் தடுக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பனந்தொழில் வல்லுநர் பயிற்சிகளைப் பெறுபவர்கள் பயிற்சியின் பின் மாதாந்தம் 5,000 ரூபாவுக்குக் குறையாத வருமானத்தைச் சுயதொழில் முறையில பெற்றுக்கொள்வதற்கும் வழிவகுக்கப்பட்டுள்ளது.

### 1000 ரூபா அலவன்ஸ்

பனந்தொழில் வல்லுநர் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தெரிவுசெய்யப்படும் பயிற்சியாளர்களுக்கு இலவச உணவு, இலவச விடுதி, பயிற்சி உபகரணங்கள் என்பன வழங்கப்படுவதுடன் மாதமொன்றுக்கு 1,000 ரூபா அலவன்ஸாகவும் வழங்கப்படவுள்ளது. பயிற்சிகள் மூன்று மாதங்களுக்கு வழங்கப்படும்

### இன்று ஆரம்பம்

இப்பயிற்சித் திட்டத்தின் முதற்கட்ட பனந்தொழில் வல்லுநர் பயிற்சிநெறி இன்று 10-ம் திகதி வடமராட்சி கிழக்கில் உள்ள குடத்தனையில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதில் பயிற்சிபெறுவதற்கு விண்ணப்பித்தவர்களில் 50 பேர் முதற்கட்ட பயிற்சிகளுக்கு நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பயிற்சிகளை வழங்குவதற்கென 5 போதனாசிரியர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 50 பேருக்கு பனந்தொழில் வல்லுநர் பயிற்சிகளை மூன்று மாதங்களுக்கு வழங்கி அவர்களை பனந்தொழில் வல்லுநர்களாக உருவாக்குவதற்கு 10 லட்சம் ரூபா நிதி செலவாகுமெனக் கணிக்கப்பட்டுள்ளது.

இப்பனந்தொழில் வல்லுநர் பயிற்சிநெறிப் பொறுப்பாளராக இலங்கை பனம்பொருள் அபிவிருத்திச்சபையின் மக்கள் தொடர்பு பதில் விரிவாக்க உத்தியோகத்தர் திரு வீ. ஜீ. தங்கவேல் பணியாற்றுவார்.

### சுபீட்சத்திற்கு வழிவகுக்கும்

பனந்தொழில் வல்லுநர் பயிற்சிகளின்போது பனைவளத்துடன் இணைந்த ஓலை, தும்பு, நார் கைப்பணிகள், வெல்லம் தயாரித்தல், பனம் உணவுப் பொருட்கள் தயாரித்தல் போன்ற பல்வேறு உற்பத்திகளிலும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன சுமார் 200 கோடி ரூபா செலவில் 10,000 பேருக்கும் பனந்தொழில் வல்லுநர் பயிற்சிநெறிகளை வழங்கி பூர்த்தி செய்யப்பட்டால் தமிழீழத்தின் முக்கிய மூலவளமான பனைவளத்தை முழுமையாகப்பயன்படுத்தி தமிழீழத்தின் பொருளாதார மேம்பாட்டிற்கும், சுபீட்சத்திற்கும் வழிவகுக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(52)

## பண்ணிசைப் போட்டி

(உடுவில்)

யாழ்ப்பாண பாடசாலை மாணவர்களுக்கிடையிலான பண்ணிசை போட்டிகள் ஜூன் மாதம் 19ம் திகதி நடைபெறும் என யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

பாடசாலை மட்டத்தில் மே 10ம், கொத்தணி மட்டத்தில் மே 17ம், கோட்ட மட்டத்தில் மே 27ம் திகதிக்கு முன்பும் மாவட்ட மட்டத்தில் ஜூன் 19ம் திகதியும் போட்டிகள் நடைபெறும்.

கொத்தணி, கோட்டம், மட்டத்தில் முதல் மூன்று இடங்களை பெறுபவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.
(109)

## நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் சோ. செல்வநாயகம் ''நினைவுப் பேருரை'' நாளை வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

புவியியல்துறை தலைவர் எஸ். பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்வைபவத்தில், பேராசிரியர் அ. துரைராசா மங்கள விளக்கேற்றி வைத்து உரையாற்றுவதுடன் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அறிமுக உரையும், கலாநிதி பால. சிவகடாட்சம் நினைவுப் பேருரையையும் நிகழ்த்துவார்கள்.
(வி)


நிரு
ரியூசன்
சென்ரர்,
ஸ்ரேசன் றேட்,
கோண்டாவில்.

A/L-91, 92
கணக்கியல்
திரு. ஸ்ரீ
(ஏ-1216)


## இராசி பலன்

10-04-1991
புதன்கிழமை

ஏகாதசி: பி. இ. 3-41 வரை
அவிட்டம்: மு. இ. 11-30 வரை
மரணயோகம்
இராகுகாலம் பகல் 12-06 முதல் 1-36 வரை.
சுபநேரம்: மாலை 4-36 முதல் 6-06 வரை.
ஏகாதசி விரதம்.

மேஷம்: இனசனமகிழ்ச்சி. இனிய சொல். தொழில் வெற்றி.

இடபம்: தொழில் போராட்டம். வயோதிபர் தொல்லை குடும்ப சுகம்.

மிதுனம்: நெடும் பயணம் காரிய அலைச்சல். குடும்ப பிணக்கு

கடகம்: அச்சுறுத்தல் உடல்நிலை பாதிப்பு. வருவாய் குன்றல்.

சிங்கம்: மேலான நிலை. வேலைப்பளு. காரிய சித்தி

கன்னி: பணநிலை குன்றல், வீண் விரோதம். மனப் போராட்டம்.

துலாம்: தேவையற்ற விவகாரம். பிதா தொல்லை. குடும்பபிரிவு.

விருச்சிகம்: அலைச்சல், குடும்ப கஸ்டம் சொத்து தகராறு.

தனுசு: முயற்சி பலிதம். பொருளாதார வாய்ப்பு. தொழில் சிறப்பு

மகரம்: அந்நிய வாசம். கருத்து மோதல். அகால போஜனம்

கும்பம்: விருந்துபசாரம், உறவினர் வருகை. குடும்ப உல்லாசம்.

மீனம்: தானதர்மம், அதிக யோசனை வைத்திய செலவு

— ஜோஸ்யர்

## நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலய அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் கடந்த 5ம் திகதி பாடசாலை மண்டபத்தில் அதிபர் க. தங்கராசா தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர், தலைவர்: க. தங்கராசா, செயலாளர்: க. தெய்வேந்திரம், பொருளாளர் திருமதிய. நல்லதம்பி, கணக்குப்பரிசோதகர்கள்: திரு த. ஸ். பாலசுந்தரம் [ஆசிரியர்], திருமதி பூ. சரவணபவானந்தன் ஆகியோர் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டனர்.
(க)

0 0 0

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் கோணந்தோட்டம் உதயதாரகை சனசமூகநிலைய வருடாந்தக் கூட்டத்தில் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாக தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: ந. தில்லைநாதன், உபதலைவர்: க. வரதலிங்கம், காரியதரிசி: சோ. தவலிங்கம், உப காரியதரிசி: ம. ஜெயமோகன், பொருளாளர்: ஆர். சிறீஸ்கந்தராசா, உபபொருளாளர்: புஷ்பராசா.

நிர்வாகசபை உறுப்பினர்களாக 7 பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.
(எஸ்)

## இடைக்கால உணவுபடி

(பருத்தித்துறை)

வலிகாமம் வடக்கு காங்கேசன்துறை பிரதேசசபையிலிருந்து சுயவிருப்பத்தின் பேரில் இளைப்பாறிய ஏழு உத்தியோகத்தர்களுக்கும் இதுவரை இடைக்கால உணவுப்படி வழங்கப்படவில்லை.
(52)

## மாணவருக்கு மண்ணெண்ணெய்

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்புகல்விக் கோட்டத்தில் எதிர்வரும் க. பொ. த. உயர்தர பரீட்சைக்கு தோற்றும் பாடசாலை மாணவர்களுக்கு தலா 2 லீற்றர் மண்ணெண்ணை சலுகை விலையில் கடந்த வாரம் தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினரால் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் வைத்து வழங்கப்பட்டது.
(72)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

## ★ வடக்கு - கிழக்கில்
# புலிகள் தந்திர தாக்குதல்: படையினர் தடுமாற்றம்

[கொழும்பு]
வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகள் புதிய உத்திகளைக் கொண்டு ஒரே நேரம் பல பகுதிகளில் தாக்குதல்களை நடாத்துவதால் படையினர் பெரும் தடுமாற்றமடைந்துள்ளதாக கொழும்பு பத்திரிகையொன்று கட்டுரை ஒன்றில் தெரிவித்துள்ளது.

கிழக்கில் படையினரின் கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறப்படும் பகுதிகளில் சாதாரணமாக பெருமளவு புலிகள் நுழைந்து கடும் தாக்குதலை நடாத்துகிறார்கள்.

ரோந்துசெல்லும் படைகளை மறைந்திருந்து தாக்கி வீழ்த்துகிறார்கள். பெரும் முகாம்களை தமது தயாரிப்பு ஆயுதங்களை கொண்டு வேகமாக தாக்குகிறார்கள். பாதுகாப்பிற்கு வரும் விமானங்கள், ஹெலிகள் கூட அவர்கள் தாக்குதலுக்கு இலக்காகுகின்றன.

ஒரே நேரத்தில் புலிகள் இவ்வாறு பலமுனைகளிலும் தந்திரமான முறையில் தாக்குவதால் படையினர் பெரும் தடுமாற்றமடைவதாக இராணுவ அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

புலிகளின் இவ்வாறான தாக்குதலை படையினர் முறியடித்து சமாளிப்பார்கள் என்றும் அந்த அதிகாரி கூறியுள்ளாராம். (சி)

## வேண்டும் வரங்கள் கிட்டும்

உற்சவ காலமென்று ஊரவர் உவகை பொங்க
நற்கதி தமக்குவேண்டி ஆலயம்வந்து சேர்வர்
நெற்கதிர் பொலிந்த கழனி நீர்வைப் பதியுறை
அற்புத முருகன் ஆலயம் கொடியுமேறும்
நெற்றிக்கண்ணின் றுதித்த முருகன் தன்
பொற்பதம் சரணென் றடைந்தால்
வெற்றிகள் வந்து சேரும் நாம்
வேண்டிடும் வரங்கள் கிட்டும்.

நீர்வை இரதி.

★ இன்று நீர்வைக்கந்தன் கொடியேற்றம்

## வெளிநாட்டு வர்த்தகர் கைது

(கொழும்பு)
வெளிநாட்டுக் கரன்ஸி நோட்டுக்களுடன் வெளிநாட்டு வர்த்தகர் ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளிடம் வசமாக மாட்டிக்கொண்டார்.

நேற்று முன்தினம் இரவு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளுக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு 23 லட்சம் வெளிநாட்டு கரன்ஸி நோட்டுகளுடன் தப்பிசெல்ல முற்படுகையில் கையும் மெய்யுமாக இவர் மாட்டிக் கொண்டாராம். [வி]

# ஆறு உயர் அதிகாரிகள் படையினர் தரப்பில் பலி

(கொழும்பு)
வடக்கு-கிழக்கில் கடந்த ஒருவாரத்தில் இடம்பெற்ற பல மோதல்களில் இராணுவ கடற்படையை சேர்ந்த 6 உயரதிகாரிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

காரைநகரில் 3 கடற்படை உயரதிகாரிகளும் வாழைச்சேனை, வாகரை, வவுனியாவில் தலா ஒரு இராணுவ உயரதிகாரியும் கொல்லப்பட்டுள்ளனர்.

இம்மோதல்களில் வடபகுதி இராணுவ தளபதி உட்பட நாலு உயரதிகாரிகள் படுகாயமடைந்துள்ளதாகவும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## வவுனியாஷெல்தாக்குதலில் இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்]
தாண்டிக்குளம் முகாமிலிருந்து நேற்று முன்தினம் மாலை கடும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டது.

நொச்சிமோட்டையிலுள்ள குடிமனைகளை நோக்கி ஏவப்பட்ட ஆறு ஷெல்களில் ஒன்று ஒரு வீட்டு வளவில் வீழ்ந்து வெடித்ததில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

வவுனியா நொச்சிமோட்டையைச் சேர்ந்த வேலாயுதம் அந்தோனி (26 வயது] என்பவர் படுகாயமடைந்து யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். திருமதி இராஜகுமாரி காமராஜ் [24 வயது] என்ற இளம்பெண்ணும் காயமடைந்தார்.

அவ்விடத்தில் வீழ்ந்த இச்ஷெல்களினால் இவர்களுடைய இரு வீடு உட்பட ஏழுவீடுகள் சேதமுற்றுள்ளன. [56)

## ஓய்வு பெற்றார்

(பண்டத்தரிப்பு)
கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தலைமை சுகாதார பரிசோதகராக கடமையாற்றிய திரு. டி ஜி. எம். ஜோசவ் கடந்த மாதம் தொடக்கம் பதவியிலிருந்து ஓய்வுபெற்றார். [72]

## 135 கலன் கசிப்பு பொலிஸார் கைப்பற்றினர்

(கொழும்பு)
திடீர்சோதனையில் ஈடுபட்ட கொழும்பு பொலிசார் 135 கலன் 'கசிப்பை' கைப்பற்றியுள்ளனர்.

இரகசிய தகவல் ஒன்றையடுத்து தெகிவளை, வெள்ளவத்த பகுதியை சுற்றிவளைத்த பொலிசார் 135 கலன் கசிப்பையும் கசிப்பு காய்ச்சும் உபகரணங்களையும் கைப்பற்றினர்.

இதன்போது அங்கிருந்த சிலர் கைதுசெய்யப்பட்டனர். பலர் தப்பியோடிவிட்டதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். [சி]

## சைக்கிள் திருட்டு

[கொக்குவில்]
கொக்குவில் ஆனைக்கோட்டை வீதியிலுள்ள க. சந்திரகுமார் என்பவருடைய சைக்கிள் கடையில் பட்டப்பகலில் பழைய சைக்கிள் ஒன்றை நிறுத்திவிட்டு அவரின் 3,500 ரூபா பெறுதியான புதிய சைக்கிள் களவாடப்பட்டுள்ளது.

இதுபற்றி விடுதலைப்புலிகளிடமும் முறையிடப்பட்டுள்ளது. (135)

## காரைநகர் தபாலகம் சுழிபுரத்தில் இயங்கும்

(யாழ்ப்பாணம்)
காரைநகர் தபாலகம். நேற்று முதல் சுழிபுரம் தபாலகத்தில் இயங்குவதாக தபாலதிபர் திரு. ஏ. துரையப்பா தெரிவித்துள்ளார்.

காரைநகர்ப் பகுதிக்கான தபால் விநியோகமும் இன்று முதல் சுழிபுரத்தில் வைத்து விநியோகிக்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

காரைநகர் தபாலக ஊழியர் அனைவரும் உடனடியாகச் சுழிபுரம் தபாலகத்திற்கு கடமைக்காகச் சமுகமளிக்குமாறும் தபாலதிபர் கேட்டுள்ளார். (சி)

# இஸ்ரேல் சிறைச்சாலைகளில் 16,000 பலஸ்தீனியர்கள்!

(டெல் அவிவ்)
இஸ்ரேலிய சிறைகளில் தற்போது 16,000ற்கும் மேற்பட்ட பலஸ்தீனியர் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்கள்

கடந்த 2 வருடங்களில் பலஸ்தீனிய தாயகப் பகுதியில் இஸ்ரேல் துருப்புக்களின் தாக்குதலில் சுமார் 2,000 பலஸ்தீனியர் கொல்லப்பட்டுள்ளனர்

சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 16,000 பலஸ்தீனியர்களையும் விடுதலை செய்ய உடன் நடவடிக்கை எடுக்குமாறு ஐ நாவுக்கும், அமெரிக்காவுக்கும் அண்மையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டபோதும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையாம். (சி]

## தமிழ் யுவதிக்கு ஜனாதிபதி நிதி உதவி

(கொழும்பு)
வெளிநாட்டுக்குச் சென்று வைத்திய உதவி பெறுவதற்கு தமிழ் யுவதி ஒருவருக்கு ஜனாதிபதி ஆர். பிரேமதாசா பண உதவி செய்துள்ளார்.

பிறந்த நாளிலிருந்தே இது வரை எழுந்து நடக்கமுடியாத நிலையில் இருக்கும் புலோலியைச் சேர்ந்த வனிதா நடராசா என்னும் யுவதிக்கு அமெரிக்காசென்றுவைத்தியம் செய்வதற்கு ஜனாதிபதி பிரேமதாஸா மூன்றுலட்சம்ரூபாவை வழங்கியுள்ளாராம்.

மேற்படி யுவதியை அழைத்துக்கொண்டு அவரது தந்தையான நடராசா அடுத்தமாதம் முற்பகுதியில் அமெரிக்காவுக்கு செல்லவுள்ளார் என்று தெரிய வந்துள்ளது. (வி)

## சுருட்டுத் தொழிலாளர்கள் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)
வட பிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தின் பொதுக் கூட்டம் சங்கப் பணிமனையில் சங்க தலைவர் செல்லையா உருத்திரா தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் ஒன்றரை ஆண்டுக்குமுன் நிர்ணயிக்கப்பட்டு சம்பளமாகிய 100 சுருட்டுக்கு 15 ரூபா வழங்கப்படவேண்டும் என்றும் தவறும் பட்சத்தில் குறைவாக சம்பளம்பெறும் தொழிலாளி மீதும் குறைவாக சம்பளம் கொடுக்கின்ற முதலாளிமீதும் தொழிலாளர் பாதுகாப்பு சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் எமது சங்கத்திற்குண்டு தொழிலாளர் நலன்கருதி சேமிப்பு திட்டத்தை அமுல் நடத்தல். தொழிலாளர் குடும்பத்தில் மரணம் சம்பவிக்கின்றசமத்தில் உடன் நிவாரணம் வழங்கும் திட்டம் உட்பட தொழிலாளர் நலன் பேணும் பல்வேறு திட்டங்களும் அமுல் நடத்துதல் போன்ற தீர்மானங்கள்நிறைவேற்றப்பட்டது. (க)

## 'குர்திஷ்' இனத்தவர்களுக்கு ஈராக்கில் தனிப்பிரதேசம்

(லக்ஷம்பேர்க்)
ஈராக் வடபகுதியில் 'குர்திஷ்' இனத்தவருக்கு தனிப்பகுதி ஒன்றை அமைக்குமாறு பிரிட்டன் ஐ நா. விடம் கோரியுள்ளது.

ஈராக்கிய படைகளிடமிருந்து 'குர்திஷ்' இனத்தவரை காப்பாற்ற இந்த நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு பிரிட்டிஷ் பிரதமர் ஐ. நா. செயலாளருக்கு அனுப்பிய அவசர தந்தியில் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனின் இந்த யோசனையை ஐரோப்பிய கட்டமைப்பு தலைவர்களும் ஆமோதித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

'குர்திஷ்' கெரில்லாக்களின் கட்டுப்பாட்டில் கடந்த சில வாரங்களாக இருந்த மேலும் சில நகரங்களை ஈராக்கிய படைகள் கைப்பற்றியுள்ளதாக பி. பி. ஸி. அறிவித்தது. (சி)

## "தொண்டர்ஆசிரியர்நியமனம் இனிமேல்இல்லை" - ஜனாதிபதி

(கொழும்பு)
தொண்டர் ஆசிரியர் நியமனம் இனிமேல் நடைமுறைப் படுத்தப்படாதென 'ஜனாதிபதி திரு.பிரேமதாசா அறிவித்துள்ளார்.

நாடு முழுவதிலுமுள்ள பாடசாலைகளில் ஆசிரியர் பற்றுக்குறையை பொறுத்து புதிதாக போட்டிப் பரீட்சைகள் மூலம் ஆசிரியராக கடமையாற்றியவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் விரைவில் முடிவடைந்துவிடும். தகுதியற்றோர் தொடர்ந்து கடமையாற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் கூறியுள்ளார். (சி)

# மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்க வேண்டும்

- சந்திரசேகர்

(புதுடில்லி)

மத்திய அரசின் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என இந்திய பிரதம மந்திரி திரு. சந்திரசேகர் கூறியுள்ளார்.

அவர் மேலும் பேசுகையில், இந்தியாவைச் சிறிய மாகாணங்களாக வகுத்து, நிர்வாகம், நிதி ஆகியவற்றில் கூடுதலான சுயாட்சி வழங்கவேண்டும் எனவும், மத்திய அரசாங்கத்திலிருந்து உயர் அதிகாரிகள் உள்நாட்டுப் பொருளாதாரத்துறையில் கட்டுப்பாடுகள் விதிப்பது போன்ற செயல்கள் நீக்கப்படவேண்டும் என்றும் கூறினார். (பூ)

## திருநாவுக்கரசு தி. மு. க.வில்

(சென்னை)

அ. தி. மு. க வில் இருந்து பிரிந்து சென்ற திரு. எஸ். திருநாவுக்கரசுவும் அவரது கட்சியினரும் தி. மு. க.வுடன் சேரவுள்ளனர்.

எதிர்வரும் தேர்தலில் தொகுதி உடன்பாடு பற்றியும் மற்றும் விஷயங்கள் குறித்தும் இன்று சென்னையில் இரு கட்சியினரும் பேச்சுக்கள் நடத்தவுள்ளனர். (பூ)

## அன்னை பூபதி நினைவுக்கூட்டம்

[யாழ்ப்பாணம்]

மறுமலர்ச்சிக் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அன்னை பூபதியின் மூன்றும் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் இன்று முற்பகல் 11 மணியளவில் யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் மாணவர் பிரதிநிதிகளும், விரிவுரையாளர்களும் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவார்கள்.

## சீ பிளேனிலிருந்து கிரனேட் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் நேற்றுப் பிற்பகல் 3-00 மணி முதல் சில மணி நேரம் சீ-பிளேனில் இருந்து கிரனேட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

கடற்படை முகாமை அண்டிய பகுதிகளிலும், களபூமி, பலகாட்டிலும் இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

இதேவேளை 'கசூரினா பீச்'சில் இருந்து பிற்பகல் 3-30 மணி முதல் குடிமனைகளை நோக்கிப் பீரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டது. சேத விபரங்கள் பற்றி எதுவும் தெரியவில்லை. (சி)

### யாழ். - கொழும்பு

1-ம் பக்கத் தொடர்ச்சி]

இது தொடர்பாக அரசாங்க மட்டத்தில் உயர் அதிகாரிகளோடு பேச்சுவார்த்தை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ். செயலகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் இந்தப் போக்கு வரத்துச் சேவையை ஆரம்பிப்பதற்காக முழுமூச்சாக ஈடுபட்டுள்ளார்.

விரைவில் கொழும்பு செல்லவிருக்கும் இவர் இம்முயற்சி வெற்றி பெறும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார். [வி)

### தொகுதி ரீதியாக

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

இத்திட்டங்களின் விரிவான அறிக்கையொன்றை யாழ் மாவட்ட பன்முகப்படுத்தப்பட்ட குழு, தயாரித்து அரசாங்கத்தின் அங்கீகாரத்துக்கு அனுப்புவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (வி)

### மன்னாரில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரவைக்கூடுகள் எட்டு, நான்கு 84 எஸ். ரகத் துப்பாக்கிகள், இவற்றிற்குரிய ரவைக்கூடுகள் 12, ஒரு 84 எஸ் 2 ரகத் துப்பாக்கி, 5 56 ரக ரவைகள் 500, நடுத்தர ரவைகள் 220, ஒரு தொலைத்தொடர்புக்கருவி ஆகியன இத்தாக்குதலில் புலிகளால் கைப்பற்றப்பட்டன. [சி-ரி-வி]

### கிழக்கில்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பாறை மாவட்டங்களில் பல இடங்களில் புலிகளுக்கும் இராணுவத்துக்குமிடையில் கடும் மோதல் நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### அநுராதபுர

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு செல்லமுடியாத நிலையில் மேற்படி இடங்களில் தரித்து நிற்கும் பயணிகளில் பெரும்பாலானோர் பெண்களும், வயோதிபர்களும் என்று கூறப்படுகிறது

இப்பயணிகள் அனைவரும் உணவும் தண்ணீருமின்றிப் பெரும் கஷ்டப்படுவதுடன் இரவு நேரங்களில் பாதுகாப்பான இடமின்றி பெரும்பாலான பெண்கள் நித்திரையின்றி தமது மூட்டைமுடிச்சுகளை அணைத்தபடி இருப்பதையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

மலசல கூடங்கள் இப்பகுதிகளில் இல்லாமையால் கூடுதலான சிறுவர்களுக்கு வயிற்றோட்ட நோய் ஏற்பட்டுள்ளதாகவும், இவர்கள் எதுவித வைத்திய வசதிகளுமின்றிக் கஷ்டப்படுவதினால் பெரும்பாலான சிறுவர்களுடன் பெற்றோர் யாழ். நகர் திரும்பியவண்ணம் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

கடந்த வாரம் முழுவதும் நடமாடும் ஜனாதிபதி செயலகம் அநுராதபுரத்தில் நடைபெற்று வந்ததையடுத்துக் கடந்தவாரம் 3 நாட்களாக ஜனாதிபதி பிரேமதாஸா அநுராதபுரத்திற்கு விஜயம் செய்தமையால், பாதுகாப்பின் நிமித்தம், தமிழ் பயணிகளை வவுனியாவிற்கு அப்பால் செல்ல அனுமதிக்கவேண்டாமென இராணுவத்தினருக்கு வலியுறுத்தப்பட்டிருந்ததாம்

இதேவேளை எதிர்வரும் 13-ம் திகதி திருமதி பிரேமதாஸா வவுனியாவுக்கு விஜயம் செய்யவிருப்பதால் மேற்படி கட்டுப்பாடு தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படலாம் என்றும் கூறப்படுகின்றது. (வி)

## வீரவணக்கம்

[யாழ்ப்பாணம்]

குப்பிளானில் நேற்றுமாலை வெளியேவர முற்பட்ட இராணுவத்துடன் இடம்பெற்ற நேரடி மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த வேணுகோபால்[திருமலை) வீரமரணமடைந்தார்.

இவரின் புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக நீர்வேலி போயிட்டி ச. ச. நிலையத்தில் இன்று வைக்கப்பட்டு கோப்பாய் மாவீரர்மயானத்தில் தகனம்செய்யப்படும்.

### கேரதீவில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சேதமடைந்ததுடன், அருகில் இருந்த சில படகுகளும் சேதமடைந்தன.

இதேவேளை நேற்று அதிகாலையும் இப்பகுதியில் ஹெலியிலிருந்து கலிபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. (வி)

### தள்ளாடி

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

யார் தூரத்தில் வைத்து நவீன ரக ஆயுதங்களால் தாக்குதலை மேற்கொண்டதில், இராணுவத் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டதுடன், இராணுவ வாகனங்களும் செயலிழந்த நிலையில் இராணுவத்தினரால் முகாமுக்கு எடுத்துச்செல்லப்பட்டது. [வி]

### காரைநகர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நோக்கி மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்களில் சண்முகம் தவமணி [வயது 50] என்ற பெண்ணும் அவரது பேத்தியான சந்திராதேவி (வயது 26 திருமணமானவர்) யும் மற்றொரு பெண்ணும் பலியானார்கள். இவர்கள் பாலாவோடை ரங்கன் வீதியில் பலியானார்கள்.

திக்கரை முருகமூர்த்தி கோயிலின் பின்னால் விழுந்த ஷெல்கள் இந்த வயோதிபப் பெண்மீதுவீழ்ந்தபோது அவர் உடல்சின்னாபின்னமாகி மரணமானார். அருகில்நின்றஅவரது பேத்தியும், மற்றொரு பெண்ணும் தலையிலும், மார்பிலும் பலத்த காயங்களுடன் பலியானார்கள்.

வயோதிப பெண்ணின் உடல் சிதறியதை அடுத்து அவரது சடலத்தை உறவினர்களால் எடுத்துவர முடியவில்லை மற்ற 2 பெண்களினதும் சடலங்களும் மூளாய்க்கு எடுத்துவரப்பட்டது.

சுமார் 2-00 மணி நேரத்திற்கு மேலாக 15க்கும் மேற்பட்ட ஷெல்கள் ஊர்பூமியை நோக்கி தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது. இதில் மேலும் ஐவர் காயமடைந்தனர். [சி]

## 3 தமிழர் வெட்டிக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் மண்டூரில் 3 தமிழர்கள் கண்டதுண்டமாக வெட்டிக்கொல்லப்பட்டுள்ளனர். (சி)

### திருமலையில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ழர்களுக்குச் சொந்தமான நூற்றுக்கணக்கான வீடுகளையும் எரித்துச் சாம்பலாக்கியுள்ளனர்.

ஈச்சிலம்பற்றை முகாமில் உள்ள இராணுவத்தினர் றுக்குமணி (வயது 28 - தங்கபுரம்], தங்கமணி (ஈச்சிலம்பற்றை) ஆகிய இரு பெண்களை பூநகர் பாடசாலையில் வைத்து சுட்டுக்கொலை செய்தனர்.

இதே இராணுவத்தினர் தமிழருக்குச் சொந்தமான 55 பெரிய கல்வீடுகளை எரித்துச் சாம்பராக்கி உள்ளனராம். (வி)

### நிபந்தனை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் கூறினார்.

ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்களுக்கு எவ்வித உரிமைகளையும் வழங்கத் தயாரில்லை என்பதனை உலகிற்கு எடுத்துக் காட்டுவதற்கு விடுதலைப் புலிகள் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவது முக்கியம் என்றும் திரு. திலகர் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா அரசைப் பொறுத்தவரையில் ஒரு இலங்கை என்ற கட்டுக்கோப்பினுள் இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காணத் தயாராக இருப்பதாகக் கூறுகிறது. ஆனால் தமிழ்மக்களுக்கு எவ்வளவு சுயாட்சி உரிமைகளை வழங்குவது என்பதனை இன்னும் தெரியப்படுத்தவில்லை என்றும் அவர் கூறினார்.

தொடர்ந்து நடைபெறும் யுத்தத்தை நிறுத்திப் பேச்சுவார்த்தை எதனையும்நடாத்த இலங்கையரசு ஆக்கபூர்வமான முயற்சி எதனையும் எடுக்கவில்லையென்றும் விடுதலைப்புலிகள் இலங்கை அரசை நம்பமாட்டார்கள் என்றும் அவர் கூறினார். [ரி]

## 6-ம் மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் இராசா இரஜீந்திரன்

தோற்றம்: 19-04-1959

மறைவு: 24-10-1990

திதி: 10-04-1991

மாதங்கள் ஆறு கழிந்தாலும்
அருமை மகனே!
உமது நினைவுகள்
எங்கள் நெஞ்சை விட்டு அகலவில்லை

உமது பிரிவால் துயருறும்:

அம்மா, சகோதரர்கள், சகோதரிகள், மைத்துனர், மருமக்கள், பேரன், பேத்தி, சித்திமார், மாமன்மார்.

'அன்னை இல்லம்',
தெல்லிப்பளை.

(சி 4631)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லத்துரை சின்னத்தங்கம்

திருமதி செல்லத்துரை சின்னத்தங்கம் 8-4-91-ல் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற கந்தப்பு செல்லத்துரை, மூளாய் றோட், குருசோ வீதி, (கூப்பன் கடை உரிமையாளரின்) அன்பு மனைவியும், சோமசுந்தரம் (கூப்பன் கடை), கனகசபாபதி (உதவி அரசாங்க அதிபர், ஒட்டுசுட்டான்), சிவராமலிங்கம் (உதவிஅரசாங்க அதிபர் அலுவலகம், யாழ்ப்பாணம்), வாலாம்பிகை, நாகேஸ்வரி, சரஸ்வதி, கமலாம்பிகை [ஆசிரியை பாஷையூர் சென். அந்தனீஸ் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், இ. நாகலிங்கம் (தபாலதிபர், யாழ்ப்பாணம்), மூ. கந்தையா [T. A யாழ்ப்பாணம்], பாலசிங்கம் [உரிமையாளர் சம்பந்தன் பார்மசி, சுண்டுக்குளி], க தேவமகேஸ்வரன் [உணவு இலாகா, கச்சேரி, கிளிநொச்சி), இராசேஸ்வரி, இராசராசேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் 10-4-91 புதன்கிழமை (இன்று) காலை 10-00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்!

செல்லத்துரை சோமசுந்தரம்,
செல்லத்துரை சிவராமலிங்கம்.

A. D. மூளாய் றோட், [குருசோ வீதி)
சுண்டிக்குளி.

(சி-4632)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under licence Number B/[illegible]/81.